**செய்தி வெளியீடு எண்:730** **நாள்: 01.11.2017**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் இன்று (1.11.2017) கோயம்புத்தூரில் நடைபெற்ற விழாவில், நெடுஞ்சாலைத் துறை சார்பில் கட்டப்பட்டுள்ள மேம்பாலத்தை திறந்து வைத்து ஆற்றிய உரை**

மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு 120 கோடி ரூபாயில் ஒரு பகுதியில் பணிகள் நிறைவு பெற்று, மக்களுடைய பயன்பாட்டிற்காக இப்பாலம் இன்றைக்கு திறந்து வைக்கப்படுகின்றது. அதுமட்டுமல்ல, மற்றொரு பகுதியிலும் விரைவாக அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு திறக்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். பொன்மனச் செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா கோவை மாநகரத்திலே கொண்டாடுகின்ற மாபெரும் பொதுக்கூட்டத்திலே, கோயம்புத்தூர் மாவட்டத்திற்குத் தேவையான திட்டங்களையெல்லாம் நாங்கள் அறிவிப்போம் என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே, உங்களுடைய, இந்த மாவட்ட அமைச்சர் திரு.வேலுமணி அவர்களின் ரவுண்டாணா வேண்டுமென்ற கோரிக்கையை அரசு செய்து கொடுக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பிட்ட காலத்தில், பாலப்பணிகள் நிறைவு செய்யப்பட்டு இன்றைக்கு திறக்கப்பட்டிருக்கிறது. கடந்தகால ஆட்சியில், திட்டமிடாமல் பணிகளை துவக்குவார்கள், பாதியில் கிடப்பிலே போட்டுவிடுவார்கள். ஆனால், இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், எந்தப் பணி செய்தாலும் திட்டமிட்டு செயல்பட வேண்டும், குறித்த காலத்திலே பணிகள் செய்து முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரவேண்டுமென்று அப்பொழுது ஆணையிட்டார்கள். அம்மா வழியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அம்மாவினுடைய அரசும், எந்தத் திட்டத்தை அறிவித்தாலும், அப்பணிகள் குறித்த காலத்தில் நிறைவேற்றப்பட்டு மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு செயல்படுகின்ற அரசு என்ற மகிழ்ச்சியான செய்தியை தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் ரூபாய் 121 கோடியில் அனுமதி அளித்து, உக்கடம் ஆற்றுப்பாலம் பணிகள் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்தார்கள். விரைவாக டெண்டர் விடப்பட்டு அந்தப் பாலப்பணியும் துவங்கப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். கோவை மருத்துவமனையில் இருந்து உப்பிலிப்பாளையம் வரை சுமார் 9 கிலோமீட்டர் தூரம், ரூபாய் 900 கோடி மதிப்பீட்டில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதுவும் நிறைவேற்றித் தரப்படும் என்ற செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இம்மேம்பாலப் பணிகள் எல்லாம் முடிவடையும்பொழுது, கோவை மாவட்டம் ஒரு நெரிசல் இல்லாத நகரமாக

உருவாக்கித் தருவதற்கு அம்மாவினுடைய அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். மேற்கு புறவழிச்சாலை அமைக்கின்றபொழுது, நகரத்திற்குள் செல்லுகின்ற வாகனங்களெல்லாம் வெளியிலே மேற்கு புறவழிச்சாலை வழியாக செல்கின்றபொழுது, நகரத்திலே போக்குவரத்து நெரிசல் முற்றிலும் குறைக்கப்படும். கனரக வாகனங்கள் நகரத்திற்குள் வந்துசெல்லாமல், புறவழிச்சாலை வழியாக செல்லுகின்ற சூழ்நிலையை உருவாக்குவதற்கு மேற்கு புறவழிச்சாலை அமைப்பதற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்டி, மாண்புமிகு அம்மாவிடைய அரசு, உங்களுடைய அரசு, மக்களுடைய அரசு, மக்களுக்கு என்ன தேவையோ அதை நிறைவேற்றுகின்ற ஒரே அரசு அம்மாவினுடைய அரசு என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். இந்த கோயம்புத்தூர் மாவட்டத்தில் ஏராளமான திட்டங்களை அம்மா அவர்கள் அறிவித்தார்கள், மாண்புமிகு அம்மாவினுடைய வழியில் வந்த அம்மாவினுடைய அரசும் அறிவித்திருக்கின்றது. அந்த திட்டங்கள் அனைத்தையும் நிறைவேற்றி கோயம்புத்தூர் மாவட்டம் தன்னிறைவு பெறுகின்ற மாவட்டம் ஆகும்.

இந்த விழாவில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சிறப்பு திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. உடுமலை கே. ராதாகிருஷ்ணன், மாண்புமிகு சட்டப்பேரவை துணைத் தலைவர் திரு.பொள்ளாச்சி ஜெயராமன், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.டி.என். ஹரிஹரன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**